மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(ச) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998–1999, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *1998–1999 ஆம் ஆண்டுக்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1998–1999 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

12. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1998–1999, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1998–1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998–1999 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 29–9–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1998–1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1998-1999 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு		
3	இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்–திருவாகம்	27,36,208
5	முத்திரைத்தாள்கள்–நிருவாகம்	11,12,275
6	ஆவணப் பதிவு	1,24,93,462
17	கல்வி	86,95,01,172
20	வேளாண்மை	50,99,42,624
27	ஊரக வளர்ச்சி	40,53,45,648
30	பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	85,98,748
33	நகர்ப் பகுதி வளர்ச்சி	2,29,88,201
35	பாசனம்	12,19,91,185
38	சாலைகளும் பாலங்களும்	10,34,64,791
39	சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	30,43,527
40	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு	2,77,05,230
48	குடிநீர் வழங்கல்	2,97,76,230
50	சுற்றுலா	59,705
மொத்தம்	**அ. வருவாய்க் கணக்கில் செலவு**	**211,87,53,006**

கோரிக்கை		(ரூபாய்)
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு		
52	வேளாண்மை குறித்த மூலதனச் செலவு	31,10,333
57	சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	3,04,818
மொத்தம்	ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	34,15,151
	பெருமொத்தம்	212,21,68,157

9. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1999–2000, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1999–2000 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 1999–2000 in excess of the amount authorised or granted for those services and purposes for that year."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள்.

திரு. அ. சவுந்தரராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகைச் செலவிற்கு இப்போது மாண்புமிகு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதான் அறிவிப்பு வந்திருக்கிறது. இன்னும் எடுத்துக்கொள்ளவில்லை.